Registered as a Newspaper in Ceylon ★ ★ விலைசதம்10

# ஈழநாடு
THE EELA NADU

தேசியதினசரி National Tamil Daily
மலர் 8 (23-7-66) இதழ் 163
பராபவ ஆடி 7 ரபி: ஆகி 4 சனிக்கிழமை




### ஆகஸ்ட் 4-ல் 4-வது டெஸ்ட்

லண்டன், ஜூலை 22

இங்கிலாந்து - மேற்கிந்திய நான்காவது கிரிக்கெட் டெஸ்ட் அடுத்த மாதம் 4-ந் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகிறது. இதுவரை நடைபெற்ற டெஸ்டுகளில் மேற்கிந்தியா 2ல் வெற்றிபெற்றுள்ளது. ஒரு டெஸ்ட் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்திருக்கிறது. (பி. டி. ஸி)

# தனியார் பாடசாலைகள் அறவிடும் கட்டணம்

# கட்டுப்பாடு விதிக்க அமைச்சர் தீர்மானம்

கொழும்பு, வெள்ளி

தனியார் பாடசாலைகளில் கட்டணம் அறவிடுவதில் கட்டுப்பாடு மேற்கொள்ள கல்வி அமைச்சர் தீர்மானித்துள்ளார். எந்தெந்த வகுப்புகளுக்கு ஆகக்கூடியதாக எவ்வித கட்டணம் அறவிடப்படவேண்டுமென்பதை நிர்ணயிப்பது சம்பந்தமாக கல்வி அமைச்சு அதிகாரிகளையும் கல்வி இலாகா அதிகாரிகளையும் கொண்ட ஒரு குழு ஆராய்ந்துவருகிறது.

அரசாங்கம் நிர்ணயிக்கும் கட்டண விதிமுறைகளை மீறி அதிக கட்டணம் வசூலிக்கும் தனியார் பாடசாலைகளை மூடிவிடவும் அல்லது அவற்றை பொறுப்பேற்கவும் வித்தியாதிபதிக்கு அதிகாரமளிக்கப்படவிருக்கிறது

யாழ்ப்பாண மாவட்டத்தில் சென் பட்ரிக்ஸ் கல்லூரி சென் ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணக்கல்லூரி. சுண்டிக்குளி மெதடிஸ்பாடசாலை' கன்னியார் திருக்குடும்ப ஆங்கிலப்பாடசாலை ஆகியவை கட்டணம் வசூலிக்கும் தனியார் பாடசாலைகளாக இயங்கிவருகின்றன.

## 1800 ஏக்கர் நிலத்தில் உபஉணவுச் செய்கை

### விஸ்வமடுகுள திட்டத்தில் வாலிபருக்கு நிலம்

யாழ்ப்பாணம், சனி

இலங்கையில் முதல்முதலாக விஸ்வமடுக்குளம் குடியேற்றத்திட்டத்தின்கீழ் தான் உப - உணவுப்பயிர்களான மிளகாய், வெங்காயம், உருளைக்கிழங்கு ஆகியவை பயிரிடப்படவிருக்கின்றன. இதுவரை காலமும் மற்றும் குடியேற்றத் திட்டங்களின்கீழ் நெற்பயிர்தான் பயிரிடப்பட்டு வந்தது.

விஸ்வமடுக்குளம் குடியேற்றத் திட்டத்தின் கீழ் சுமார் 1800 ஏக்கர் நிலத்தில் உப-உணவுப் பயிர்கள் பயிரிடப்படும். இத்திட்டத்தின் கீழ் 600 படித்த வாலிபர்களுக்கு நிலம் வழங்கப்படும். இத்திட்டம் பூரணமாக நிறைவேற்றப்பட்டதும் வடமாகாணத்தைச் சேர்ந்த ஒவ்வொரு தொகுதியிலிருந்தும் 50 படித்த வாலிபர்களுக்கும், வவனியாத் தொகுதியிலிருந்து 50 வாலிபர்களுக்கும் நிலம் வழங்கப்படும். தற்பொழுது இத்திட்டத்தில் ஒருபகுதி நிறைவேற்றப் பட்டுள்ளது.

#### நிலமும் நீரும்

இத்திட்டத்திலுள்ள நிலம் யாழ்ப்பாண மாவட்டத்தை சேர்ந்ததாகவும், குளம்வவனியா மாவட்டத்தைச் சேர்ந்ததாகவும் இருக்கிறது.

இத்திட்டத்தில் குடியேற்றப்படும் வாலிபர்களின் முதல் பகுதியில் 100 வாலிபர்கள் இடம்பெற்றுள்ளார்கள். இந்த 100 வாலிபர்களில் கோப்பாய் தொகுதியிலிருந்து 40 வாலிபர்களும், உடுப்பிட்டித் தொகுதியிலிருந்து 30 வாலிபர்களும், கிளிநொச்சித்தொகுதியிலிருந்து 30 வாலிபர்களும் அடங்கியுள்ளார்கள்.

#### ஆளுக்கு மூன்று ஏக்கர் காணி

ஒவ்வொரு வாலிபருக்கும் 3 ஏக்கர் வீதம் காணி வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் முதன்முதலாக உப-உணவுப் பயிர்கள் உற்பத்தி செய்யப்படுவதால் நாட்டிலுள்ள எல்லா மக்களின் கவனத்தையும் பெறக்கூடியதாக இத்திட்டமிருக்கும்.

இத்திட்டத்தின்கீழ் வாலிபர் ஒவ்வொருவரும்பெறும் 3 ஏக்கர் நிலத்தில் 1 ஏக்கரை அரசாங்கம் திருத்திக் கொடுக்கும். மற்றும் இரு ஏக்கரை வாலிபர் திருத்த வேண்டும்.

(2-ம் பக்கம் பார்க்க)

## உயர்கல்வி மசோதாவை எதிர்க்கட்சி எதிர்க்கும்

கொழும்பு, வெள்ளி

வருகிற 29ந் திகதி உயர்தரக் கல்வி மசோதா பார்லிமெண்டுக்கு வரும்போது எதிர்க்கட்சியினர் அதை ஆட்சேபிப்பார்கள் எனத் தெரிகிறது.

இரு முன்னாள் கல்விமந்திரிகளான திரு. கலுகல்லை திரு. மஹ்மூத் ஆகியோரடங்கிய எதிர்க்கட்சியினர்கமிட்டி, இந்த மசோதாவை, குறிப்பாக அது கல்விமந்திரியை ஒரு சர்வாதிகாரியாக்கும் அளவுக்கு அதிகாரம் அளிப்பதாக இருப்பதாய் எதிர்க்கவேண்டுமெனச்சிபார்சு செய்திருக்கிறது கல்வி மசோதாபற்றி பரிசீலிக்க இக்கமிட்டி நியமிக்கப்பட்டிருந்தது.

பல்கலைக்கழகத்தின் சுதந்திரம் பாதுகாக்கப்படவேண்டுமெனவும் இக்கமிட்டிகூறியிருக்கிறது.

பொலிஸ் கமிஷனிலிருந்து

## திரு. ரெக்வுட் ராஜினமா

கொழும்பு வெள்ளி

ஐவரடங்கிய பொலிஸ் கமிஷனிலிருந்து முன்னாள் உதவி பொலிஸ் இன்ஸ்

(6-ம் பக்கம் பார்க்க)

## இன்று

காலம்சென்ற டாக்டர் கே. சி. சண்முகரெத்தினத்தின் மரணம் குறித்து அனுதாபம் தெரிவிக்குமுகமாக இன்று பிற்பகல் 5-00 மணிக்கு வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் யாழ்ப்பாணம் ஸ்ரீ இராமகிருஷ்ண சபையின் ஆதரவில் ஒரு இரங்கற் கூட்டம் நடைபெறும்.

## சட்டவிரோத குடியேற்றக்காரருக்கு புகலிடமளித்தாராம்

### மயிலிட்டி வாசிக்கு 3 வருடச் சிறை

மாவிட்டபுரம், வெள்ளி

சென்ற 8-ந்திகதி மயிலிட்டியில் சட்டவிரோதமாக வந்து இறங்கிய 30 இந்தியர்களில் இருவருக்கு புகலிடம் கொடுத்ததாக மயிலிட்டி பலாலி வாசி ஒருவருக்கு இன்று மல்லாகம் நீதிபதி திரு. டி. எஸ். நித்சிங்கா மூன்று வருடக் கடுழியச் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

இவ்வழக்கில் மயிலிட்டி வாசியான பாவிலுப்பிள்ளை அருள்பிரகாசம் என்பவர் சென்ற 8ந்திகதிஇந்தியாவிலிருந்து மயிலிட்டிக் கரையில் வந்திறங்கியதாகக் கருதப்பட்ட தென்னிந்தியர்களானபழனிசாமி அழகு கறுப்பையா முத்தையா ஆகிய இருவருக்கும் இலங்கையில் புகலிடம் அளித்ததாககாங்கேசன்துறை சட்டவிரோத குடியேற்ற தடுப்பு ஆலைய பொலிஸ் அதிகாரி திரு. ஏ. எச். எம். ஜவ்வாரால் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. எதிரிதரப்பில் வழக்கறிஞர் திரு. அ. குமர

(6-ம் பக்கம் பார்க்க)

## தேசீயசுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

நேற்று இழுக்கப்பட்ட தேசீய சுவீப் முடிவுகள் வருமாறு:

முதலாவது பரிசு
07 K 0946 ரூ. 31,850-00

இரண்டாவது பரிசு
01 Q 0497 ரூ. 12,740-00

மூன்றாவது பரிசு
12 x 0285 ரூ. 3,185-00

5-ம் பக்கம் பார்க்க

பொலிஸ் நிலையங்களில்

## ஆயுத, வெடி மருந்துவகைகளின் இருப்பைகணக்கெடுக்க உத்தரவு!

கொழும்பு, வெள்ளி

நாடு பூராவிலுமுள்ள பொலிஸ் நிலையங்களிலுள்ள ஆயுத, வெடிமருந்து இருப்புகளை பரிசோதித்துக் கண்காணிக்குமாறு பொலிஸ்இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. அட்டிகலை உத்தரவிட்டுள்ளார்.

அவரவர்பொறுப்பிலுள்ள பகுதிகளில் உள்ள பொலிஸ் நிலையங்களில் உள்ள துப்பாக்கி, மற்றும் ஆயுதவகைகள், இவற்றுக்கு பாவிக்கப்படும் வெடிமருந்து வகைகள் ஆகியவை பற்றிய இருப்பு நிலையை கணக்கெடுக்குமாறு சகல உதவிப்பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல்களையும் திரு. அட்டிகலை கேட்டுள்ளார்.

சமீப காலமாகப் பல பொலிஸ் நிலையங்களிலிருந்தும் ஆயுதவகைகளும், வெடிமருந்துவகைகளும் காணாமல் போனதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாரத்தில் கோட்டை துறைமுகபொலிஸ் நிலையங்களிலிருந்து ரிவோல்வர்களும், வெடிமருந்துகளும் காணாமல் போனதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அரசாங்க அச்சகத்தில் காவல் புரிந்துகொண்டிருந்த இரண்டு கான்ஸ்டபிள்களின் ரைபிள் துப்பாக்கிகள் காணாமல் போயின.

(6-ம் பக்கம் பார்க்க)

பருத்தித்துறை

## பஸ்நிலைய விஸ்தரிப்புக்காக 32 கடைகள் அகற்றப்பட்டன

பருத்தித்துறை, வெள்ளி

பருத்தித்துறை பஸ் நிலையத்தை விஸ்தரிக்குமுகமாக பொதுச் சந்தையைச் சுற்றியுள்ள முப்பத்திரண்டு கடைகள் அகற்றப்பட்டுள்ளன. பருத்தித்துறை நகரசபையின் உத்தரவைத் தொடர்ந்தே இந்தக்கடைகள் அகற்றப்பட்டன. பஸ் நிலையத்தை விஸ்தரிப்பதுடன் போக்குவரத்து வீதியையும் சீர்படுத்தும் நோக்கத்துடனுமே இதனை மேற்கொண்டுளளதாக நகரசபைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

பஸ்நிலையம் விஸ்தரிப்பது குறித்தும், சந்தையைச் சுற்றி நவீன முறையில் பொதுமக்களுக்கு வசதியாக வீதியை அமைப்பதுபற்றியும் நகரசபைத் தலைவர் திரு. என் நடராசா, உபதலைவர் திரு வி. நாகராஜன், மின்சார அதிபர், போக்குவரத்துப்பகுதி அதிகாரி ஆகியோர் நேரில்சென்று ஆராய்ந்தனர்.

இந்த விஸ்தரிப்பு வேலைகளையாவும் சிரமதான இயக்கமூலமாகவே நடைபெற இருக்கின்றன. இந்த வேலைகளையாவும் துரிதமாக நடைபெறுமெனவும் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

தாங்கள் மட்டும் தவறு செய்யாமலிருந்தால் போதாது; பிறர் தவறு செய்வதற்கும் இடம் கொடுக்கக் கூடாது.

—மகாத்மா காந்தி


# ஈழநாடு

EELANADU National Tamil Daily, Post Box 49, JAFFNA.
Telegrams : EELANADU Jaffna. Telephone : 389

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு ஆடி மீ 7 உ (23-7-66)


## சிம்மாசனப் பிரசங்க விவாதம்

தேசிய அரசாங்கத்தின் இரண்டாவது சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை பார்லிமெண்டில் நிறைவேறிவிட்டது. இப்பிரேரணைக்கு எதிர்க்கட்சியினர் கொண்டு வந்த திருத்தப் பிரேரணைகள் தோற்றுவிட்டன. ஆயினும் அவைகளுக்கு ஆதரவாக 47 வாக்குகள் கிடைத்திருக்கின்றன. இது இலங்கையில் பலம் வாய்ந்த எதிர்க்கட்சி இருக்கிறதென்பதையும் இங்கு ஜனநாயகம் சிறப்புற இயங்குமென்பதையுமே காட்டுகிறது. சிம்மாசனப்பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை மீது நடைபெற்ற விவாதத்தில் பலதரப்பினரும் தெரிவித்த கருத்துக்கள் பயனளிக்கவேண்டும்.

உண்மையான தேசிய ஐக்கியம் இன்னும் ஏற்படவில்லையென்று எதிர்க்கட்சி அங்கத்தினர் சிலர் தெரிவித்ததுடன் தேசிய ஐக்கியத்துக்குப் பல்வேறு விதமான வியாக்கியானங்களையும் தெரிவித்தனர். இதற்கு பிரதமர் பதிலளிக்கையில், நூற்றுக்கு நூறு வீதம் தேசிய ஐக்கியம் இன்னும் ஏற்படவில்லையென்பது உண்மையேயாயினும் முன்னர் நிலவிய கசப்புமனப்பான்மையும் அவநம்பிக்கையும் குறைந்து ஓரளவுக்காவது இரு பெரும்சமூகங்களுக்கிடையில் இப்பொழுது நல்லுறவு ஏற்பட்டுள்ளது என்றார் தேசியஐக்கியம், சமூக சௌஜன்யம் இதுவே தமது கொள்கையென்பதைப் பிரதமர் மீண்டும் வலியுறுத்தியிருக்கிறார். சிங்கள ஆசிரியர்களை வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்புவது சம்பந்தமாக எதிர்க்கட்சியினர் தெரிவித்த கருத்துக்களுக்குப்பிரதமர் பதிலளிக்கையில் தமிழ்ப் பகுதிப் பிரதிநிதிகளுடனும் கல்வி அமைச்சருடனும் கலந்தாலோசனை செய்வதாகக் கூறினார். சிங்களத்தை தமிழ் மக்களின் தொண்டைக்குள் திணிக்க முடியாதென்றும் திணிக்க முயன்ற முன்னைய அரசாங்கம் அதில்வெற்றியீட்டவில்லையென்றும் பிரதமர் தெரிவித்தது தேசிய ஐக்கியத்தை நிலைநாட்டுவதில் எவ்வித நடைமுறையைப் பின்பற்றவேண்டுமென்பதை அவர் அறிந்துள்ளதுமட்டுமல்ல மற்றையோருக்கும் விளக்கிக் கூறியதாகவே கருதவேண்டும்.

ஜனநாயக சோஷலிஸம், மொழிப் பிரச்னை, தேசிய ஐக்கியம் பொருளாதாரப் பிரச்னை ஆகிய முக்கிய தேசியப் பிரச்னைகள் பற்றி எதிர்க்கட்சியினர் தெரிவித்த குறைகள் குற்றச்சாட்டுகளுக்கு பிரதமர் தகுந்த பதிலளித்திருப்பதுடன் அரசாங்கத்தின் கொள்கையையும் தெளிவாக்கியுள்ளார்

எதிர்க்கட்சியைச் சேர்ந்த கொழும்பு தெற்கு இரண்டாவது எம். பி. திரு, பெர்னார்ட் சொய்சா நாட்டின் பொருளாதாரக் கஷ்டங்கள் பற்றிக் குறிப்பிடுகையில், தங்கள் பொருள்களை சர்வதேச சந்தையில் குறைந்த விலைக்கு விற்கவும் ஆனால் இறக்குமதிப் பொருள்களுக்கு அதிக விலைகொடுக்கவும் வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு புதிய காலனித்துவ ஏதேச்சாதிகாரம் காரணம் என்று கூறினார். இது உண்மையே. நமது மூலப் பொருட்களையும் உற்பத்திப் பொருட்களையும் குறைந்த விலையிலேயே வெளியில் விற்பனைசெய்ய வேண்டியுள்ளது. நாம் இறக்குமதிசெய்யவேண்டியபொருள்களின் விலைகளோ அதிகம். நாட்டின் பொருளாதாரப் பிரச்னை ஒரு தேசியப்பிரச்னை. திரு பெர்னார்ட் சொய்சா தெரிவித்த கருத்து பயனுள்ளது. கருத்தைத்தெரிவித்ததுடன் நின்றுவிடாது இத்தேசியப் பிரச்னைக்கு ஒருநல்ல வழிகாண பிரதமருக்கு உதவியும் ஒத்துழைப்பும் அளிக்க வேண்டும். பிரதமரும் தேசிய பிரச்னைகளில் எதிர்க்கட்சியினரின் உதவியையும் ஒத்துழைப்பையும் நாடுவது நல்லது.

## ரயில் திருட்டு அதிகரிப்பு

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வரும் மெயில் ரயிலில் சென்ற தினங்களில் திருட்டுச்சம்பவங்கள் அதிகரித்துள்ளதாகவும் படுக்கை வசதியுடைய முதல் வகுப்புப் பெட்டிகளில் பிரயாணம் செய்பவர்கள் கூட திருடரின் கைவரிசைக்குப் 'பலி'யாகியிருப்பதாகவும்செய்திகள் கூறுகின்றன. இச்சம்பவங்களையிட்டு ரயில்வே பகுதியினர் நிச்சயம் பெருமைகொள்ள முடியாது.

கொழும்பு — யாழ்ப்பாணம் ரயில் போக்குவரத்துச் சேவைதான் இலங்கை ரயில்வே பகுதியினருக்கு அதிக வருமானத்தைத் தேடிக்கொடுப்பது. பிரயாணிகளுக்கு வசதி செய்துகொடுக்கப்பட வேண்டியதுடன் பிரயாணிகளுக்கும் அவர்களின் உடைமைகளுக்கும் பாதுகாப்புக்கும் ரயில்வே பகுதியினர் உத்தரவாதமளிக்கவேண்டும். ரயில்வேயில் பாதுகாப்புப்பிரிவு ஒன்றுள்ளது இப்பிரிவில் கடமையாற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்குச் சம்பளமாகவும் மற்றும் அவர்களின் வசதிகளுக்காகவும் பணம் செலவிடப்படுகிறது. ரயில் பிரயாணிகளுக்கும் அவர்களின் உடைமைகளுக்கும் பாதுகாப்பளிக்கவேண்டியதும் இந்தப்பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் கடமையாகும். யாழ்ப்பாணம் மெயில்ரயிலில்மட்டுமல்ல எந்த ரயிலில் திருட்டுச் சம்பவம் நடந்தாலும் அந்த ரயிலில் குறிப்பிட்ட நேரத்தில் கடமையாற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் அதற்குப் பொறுப்பேற்க வேண்டும் என்ற விதி ஏற்படவேண்டும்; இல்லையேல் திருட்டுச் சம்பவங்கள் குறைவதற்குப் பதிலாக அதிகரிக்கக்கூடும் வேலியேபயிரை மேய்ந்த கதையாகவும் மாறிவிடலாம்.

ரயில்வே பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தமது கடமையைச்சரிவரச் செய்யவேண்டியது தான். எனினும் பிரயாணிகள் தமது உடைமைகளைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். அதுவே சுலபமான வழி.

தொழில்நுட்பக் கல்வி

## அரசாங்கத்துக்கு வடமாகாண ஆசிரிய சங்கம் மகஜர்

யாழ்ப்பாணம், சனி

உத்தேசபொதுத்தொழில்நுட்பக் கல்வித்துறையில் பல குறிப்பிட்ட மாற்றங்களைச் செய்யவேண்டுமென்றுகோரி வடமாகாண ஆசிரியர் சங்கம் அரசாங்கத்துக்கு மகஜரொன்றைச் சமர்ப்பித்துள்ளது.

அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:- ''உயர்தர கல்வி சம்பந்தமாக ஆசிரியர் சங்கங்களின் ஆலோசனை கோரப்படாததையிட்டு நாம் மிகவும் கவலை கொண்டுள்ளோம். இது ஜனநாயகக் கொள்கைக்கு முற்றிலும் முரண்பாடானதொன்றாகும். எந்தவிதமான கல்விச் சீர்திருத்தமும் ஆசிரியர்களின் பூரண ஒத்துழைப்பின்றி இயங்கமாட்டாது. ஏனெனில் அதனை செயலாற்றுவதும் நடைமுறைப்படுத்துவதும் ஆசிரியர்களினது பொறுப்பாகும்

பாடசாலையை விட்டு வெளியேறும்போது ஒரு மாணவனுக்கு வயது பதினாறாகவிருப்பதுடன் போதனாமொழியும் தாய்மொழியிலேயே போதிக்கப்படல் வேண்டும்.''

பாடசாலை நலவுரிமைச் சபை, ஆசிரியர்கள் நியமனம், மாவட்ட ஆசிரியர் இடமாற்றசபை, ஆசிரியர் லீவு, ஆசிரியர் சங்கங்கள் சம்பந்தமாகவும் இந்த மகஜரில் ஆலோசனைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

தனியார் பாடசாலைகள் பிரிவுத்திட்டப்படி செயலாற்றாது விட்டால் அப்பாடசாலைகள் அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட வேண்டுமென்றும், தோட்டப்பாடசாலைகளும் அரசாங்கத்தினால் நடாத்தப்படல்வேண்டுமென்றும் தெரிவித்துள்ளது.

கல்வி ஆராய்ச்சி

## தென் இந்திய ஆசிரியசங்க கல்விசபையின் முன்மாதிரி

கல்வி சம்பந்தமான ஆராய்ச்சிமூலம் தென்னிந்தியாவில் பல முன்னேற்றங்கள் செயல்பட்டுவருகின்றன. தென்னிந்திய ஆசிரியர்கள் சங்க கல்வி ஆராய்ச்சி சபை மேற்கொண்ட சுயமுயற்சியின்பயனாக பலவிதமான கல்விசம்பந்தமான ஆராய்ச்சிகள் நடாத்தப்பட்டுள்ளன: இச்சபைக்கு அரசாங்கத்தின் நிதி உதவியும் கொடுக்கப்பட்டு வருவதனால் இத்துறையில் பல குறிப்பிட்ட மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன.

ஆசிரியர்களின் அறிவைப் பெருக்குவதற்கும் அவர்களின் நலன்கருதியும் கணிதம். புவியியல், ஆங்கிலம் சம்பந்தமான பலவித சஞ்சிகைகளை இச்சபை வெளியிட்டு வருகின்றது. இதனையும்விட இச்சபை 'கனிஷ்ட விஞ்ஞானம்' என்ற தலைப்புடன் வேறோர் சஞ்சிகையையும்பிரசுரித்து வருகின்றது.

பாடசாலை நூல்நிலையங்களிலுள்ள குறைபாடுகள் பற்றியும் எவ்வாறு தற்காலத்தில் பார்வைஏடுகள் தட்டுப்பாடாக இருக்கிறதென்பது பற்றியும் இச்சபை ஆராய்ந்துள்ளது. தற்பொழுது இருபது புதிய பார்வைஏடுகளை இச்சபைஉருவாக்க முயற்சி மேற்கொண்டுள்ளது. பாடசாலைக்குச் செல்லமுன்னர் ஒருபிள்ளை எந்தவகையான சொற்களைப் பேசிப் பழகுகிறதென்ற ஆராய்ச்சியை நடத்தி அதற்கான ஓர் ஏட்டையும் தயாரித்துள்ளனர். பள்ளிக்கூடங்களுக்குச் செல்லும் சிறுவர்களுக்கு இந்த ஏடு ஓர் அடிப்படையான முறையில் கல்வியைப்புகட்ட வழி வகுக்கும்.

தற்பொழுது தென்னிந்திய அரசாங்கமும் இந்த ஆராய்ச்சிச்சபையின் முன்மாதிரியை மனதிற்கொண்டு கல்விஆராய்ச்சி நிலையம் ஒன்றை ஸ்தாபித்துள்ளது.

## 1800 ஏக்கர் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உப-உணவுப்பயிர்கள் உற்பத்தியில், வாலிபர்கள் தினமும் விவசாய இலாகா உத்தியோகத்தர்களின் ஆலோசனைகளை உடனுக்குடன்பெறுவார்கள். விவசாய பயிற்சியாளர் ஒருவரும், நான்கு உணவுஉற்பத்தி ஓவசியர்களும் வாலிபர்களுக்குஆலோசனை கூறுவார்கள். உப உணவுவகைகளான, உருளைக்கிழங்கு பம்பாய் வெங்காயம் ஆசியவற்றிற்கு அரசாங்கம் இதுவரைகாலமும் பிறநாடுகளுக்கு அனுப்பிவந்த பணத்தைச் சேமிப்பதற்கும் இந்நாட்டின் சுயதேவையைப்பூர்த்தி செய்வதற்கும், இத்திட்டம் நன்கு உதவியளிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டம் ஆரம்பத்தில் கஷ்டமாகத்தோன்றினாலும் இறுதியில் வாலிபர்கள் பயனடைவார்களென்றும், உபஉணவுப்பயிர்களை முதன் முதலாக உற்பத்தி செய்வதால், சில தொல்லைகள் எதிர்நோக்கலாமென்றும், ஆனால் அதை இலகுவில்சமாளித்து இதில் வெற்றி காணலாமென்றும் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

## சுந்தரர் குருபூசை

மானிப்பாய், வெள்ளி

மானிப்பாய் இந்துசமய விருத்திச்சங்கத்தினர் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை இம்மாதம் 25-ந் திகதி திங்கட்கிழமை மாலை 4 மணி தொடக்கம் மானிப்பாய் வேலக்கை பிள்ளையார் கோவிலில் கொண்டாடுவர். புலவர் த. குமாரசாமிப் பிள்ளை சொற்பொழிவாற்றுவார்.

## நாட்டிலும் நகரிலும்

1965-ம் ஆண்டில் கொழும்பு நகர எல்லைக்குள் இறந்தவர்களில் பெரும்பான்மையானவர்கள் இருதய நோயினால் தான் மாண்டார்கள் என்று கொழும்பு நகரசபை சேகரித்த புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. இறந்தவர்களின் மொத்த தொகையான 4077இல் 912 பேர் இருதய நோய்க்கு பலியாகியுள்ளார்கள்.

திடீரென்று இருதயத் துடிப்பு நின்று போவதை மாரடைப்பு என்றும் குறிப்பிடுகிறோம். தண்ணீரில் மூழ்குதல், மின்சார அதிர்ச்சி, புகையினால் மூச்சுத் திணறுதல் போன்ற பல விதமான விபத்துகளினால் மாரடைப்பு ஏற்பட்டுத்தான் மக்கள் மரணமடைகிறார்கள். இவர்களுக்கு இருதயத் துடிப்பு நின்றுவிடுமேயன்றி அவர்கள் உடனே இறப்பதில்லை. மூளை முதலிய மற்றைய முக்கியமான பகுதிகள் சில நிமிடங்களுக்காவது ஜீவத் துடிப்புடனே இருக்கும். இந்த சில நிமிடங்களுக்குள் இருதயத்தை மீண்டும் இயங்கும்படி செய்துவிட்டால் மரணத்தை தடுத்துவிடலாம்.

துரதிர்ஷ்டவசமாக மேலே சொல்லப்பட்ட விபத்துகள் ஏற்படும் சமயத்தில் வைத்திய உதவி சுலபமாக கிடைப்பதில்லை. ஆஸ்பத்திரிக்கோ, டாக்டரிடமோ நோயாளியை எடுத்துச் செல்வதற்கிடையில் ஆவி பிரிந்துவிடுகிறது. இது எங்கள் நாட்டில் மட்டுமன்றி அமெரிக்கா போன்ற முன்னேற்றமான நாடுகளில் இவ்வித சங்கடங்கள் இருக்கின்றன.

இந்த ஆபத்தை தவிர்ப்பதற்கு அமெரிக்காவில் ஓர் இலேசான வழியைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். டாக்டரின் உதவி இல்லாமலும் ஆஸ்பத்திரிக்குப் போகாமலும் நின்றுபோன இருதயத் துடிப்பை மீண்டும் உண்டாக்குவதே இந்த முறை. அங்கே வருடா வருடம் மாரடைப்பினால் இறக்கும் சுமார் 5 லட்சம் பேரில் கடைசி ஒரு லட்சத்தினரையாவது இந்த முறையைக் கையாண்டு தப்பவைக்கலாம் என்று டாக்டர்கள் கருதுகிறார்கள்.

ஒரு கடிகாரம் ஓடாமல் நின்றுவிட்டால் அதன் 'பெண்டுல'மும் நின்றுவிடும். அதை விரலால் மெதுவாகத் தட்டிவிட்டால் கடிகாரம் சிறிது நேரத்துக்காவது ஓடிக்கொண்டிருக்கும், இதைப் போலவே நின்றுவிட்ட இருதயத் துடிப்பை எப்படியாவது சிறிதுநேரம் மீண்டும் துடிக்கும்படி செய்துவிட்டால் முற்றாக மரணம் சம்பவிக்கு முன் டாக்டரிடமோ ஆஸ்பத்திரிக்கோ நோயாளியை எடுத்துச் சென்றுவிடலாம்.

நோயாளியின் மார்பின் மீது கையை வைத்து மெதுவாக அமுக்குவதாலும் வாய்க்கு வாய்வைத்து மூச்சை ஊதுவதாலும் நின்றுபோன இருதயத்துடிப்பை மீண்டும் ஏற்படுத்தலாம். இந்தச் சிகிச்சையை இருதயம் நின்ற 3 முதல் 4 நிமிடங்களுக்குள் செய்யவேண்டும். அல்லாவிட்டால் மூளை செத்துவிடும். இன்னொன்று இதை நன்கு பயின்றவர்களே செய்யவேண்டும். உயிர் உள்ளவர்கள் மீதும் இதைச் செய்யலாகாது.

இந்தச் சிகிச்சை முறையை கையாளப்பட்ட 1270 நோயாளிகளில் 317 பேர் உயிர் பிழைத்துவிட்டார்கள்.

தினமும் மேனாட்டுப் படிப்புக்காகச் செல்லும் வைத்

(4-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

திய மாணவர்கள் இப்படியான நவீன முறைகளைப் பயின்று வந்து பொலிசாருக்கும், நெருப்பணைக்கும் படையினருக்கும் ஆஸ்பத்திரிச் சிப்பந்திகளுக்கும் கற்பித்துக்கொடுத்தால் இலங்கையில் மாரடைப்பினால் அநியாயமாக இறக்கும் எத்தனையோ பேரைப் பிழைக்க வைக்கலாம். இருதயநோயினால் ஏற்படும் திடீர்ச்சாவுகள் இலங்கை முழுவதும் அதிகரித்துவிட்டன. நல்ல திடகாத்திரசாலிகள்கூட இதற்குப் பலியாகிறார்கள். மேலே சொல்லப்பட்ட மிகவும் இலகுவான முறை நம் நாட்டில் தெரியாமல் இருப்பது எவ்வளவு பெரிய அநியாயம். — வழிப்போக்கன்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இந்தியாவுடன் (நிபந்தனையுடன்) பேச்சு நடத்த

## பாகிஸ்தான் இணக்கம்

## அடிப்படைத் தகராறு காஷ்மீரே என்கிறது

ராவல்பிண்டி, ஜூலை 21

நிபந்தனையுடன் பேச்சு நடத்தத் தயார் என்று இந்தியாவுக்கு பாகிஸ்தான் அறிவித்துள்ளது. அதிகாரிகள் கட்டத்தில் அல்லது மந்திரிகள் கட்டத்தில் பேச்சுக்கள் நடத்தலாமென்றும் இப்பேச்சுவார்த்தைகளில் ஜம்மு — காஷ்மீர் தகராறும் இடம்பெற வேண்டுமென்றும் இந்தியாவுக்கு பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

ராவல்பிண்டியில் நேற்று நடைபெற்ற பாகிஸ்தான் மந்திரிசபைக் கூட்டத்துக்குப் பின்னர் இம்முடிவு வெளியிடப்பட்டது. இது சம்பந்தமான குறிப்பொன்று இன்று இங்குள்ள இந்தியத் தூதரிடம் பாகிஸ்தான் அரசாங்கம் சமர்ப்பித்தது.

காலம்சென்ற இந்தியப் பிரதமர் திரு. லால்பகதூர் சாஸ்திரிக்கும் பாகிஸ்தான் அதிபர் பீல்ட் மார்ஷல் அயூப்கானுக்குமிடையே டாஷ்கண்டில் கைச்சாத்தான பிரகடனத்துக்குப் பின்னர் கடந்த மார்ச் மாதத்தில் இந்திய-பாகிஸ்தான் மந்திரிகளுக்கிடையே இங்கு பேச்சுக்கள் நடைபெற்றன. ஆனால் பயன் எதுவும் இல்லாமலே இக்கூட்டம் முடிவடைந்தது. இதற்குக் காரணம் காஷ்மீர் பிரச்னை என்று கூறப்பட்டிருந்தது.

### இந்திய யோசனை

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே நிலவும் தகராறுகளைத் தீர்த்துவைக்கும் பொருட்டு பேச்சுக்கள் நடத்த இந்தியா தயாராக இருக்கிறதென்று அண்மையில் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி பாகிஸ்தானுக்குத் தெரிவித்திருந்ததுடன் இப்படியான பேச்சுக்களை நடத்த பாகிஸ்தான் முன்வர வேண்டுமென்று அழைப்பும் விடுத்திருந்தார். இந்த யோசனையை ஏற்றுக்கொண்டே பாகிஸ்தான் பேச்சு நடத்த இணக்கம் தெரிவித்துள்ளது.

### அதிகாரி விளக்கம்

இதுபற்றி பாகிஸ்தான் அதிகாரியொருவர் நேற்றுத் தெரிவிக்கையில், இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே நிலவும் சகல தகராறுகளையும் தீர்த்துவைக்க பாகிஸ்தான் விருப்பம் கொண்டுள்ளதென்றும் இதனை முன்னிட்டே இப்பொழுது இந்தியாவுடன் பேச்சு நடத்த இணக்கம் தெரிவித்துள்ளதென்றும் கூறினார்.

"இப்பேச்சுக்கள் ஆக்கபூர்வமானதாகவிருக்க வேண்டும் என்று பாகிஸ்தானின் நோக்கமாகும். ஆனால் ஜம்மு-காஷ்மீர் அடிப்படைப் பிரச்னையும் இப்பேச்சுக்களில் அடங்க வேண்டும். அதாவது முன் நிபந்தனையுடன் கூடிய பேச்சுக்களை நடத்த பாகிஸ்தான் விரும்புகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

### மீண்டும் முட்டுக்கட்டை

பாகிஸ்தான் மீண்டும் முன்நிபந்தனையுடன பேச்சு நடத்த விரும்புவது ஒரு முட்டுக்கட்டையாகவே உள்ளது என்று இந்திய அதிகாரிகள் கருத்து வெளியிட்டனர்.

---

### விலை உயர்ந்தபரிசு!

### கோஸிஜினுக்கு காமராஜர் கொடுப்பார்!

சென்னை, ஜூலை 21

ரஷ்யப் பிரதமர் கோஸிஜினுக்கு கொடுக்க காமராஜர் விலைஉயர்ந்த அழகு மிக்க பொருட்களைக் கொண்டு போகிறார்! காமராஜர் ஏழுநாடுகள் சுற்றுப்பயணமொன்றை நேற்றுமுன் தினம் மேற்கொண்டுள்ளார். அவரது நிகழ்ச்சியின்படி நாளையதினம் ரஷ்யா போகிறார். அப்போது விலை உயர்ந்தபொருட்களை அங்கு கொண்டுபோவார்.

நெட்டியினால் செய்த தஞ்சாவூர் கோபுரத்தின் மாதிரிவேலைப்பாடுஅமைந்த தஞ்சாவூர் தட்டு, சந்தனக் கட்டையில் வட்டமாகச் செய்து அதில் அழகு வேலைப் பாடுகளால் செய்யப்பட்டு சுவரொட்டிகள், பூந்தொட்டிகள், தேங்காய் சிரட்டையாலும், மூங்கில் குழாயாலும் அழகாகச் செய்யப்பட்ட மின்சார மேஜை விளக்கு ஆகியவையே இந்தப் பரிசுப்பொருட்கள்!

---

பீகிங், ஜூலை 22

அமெரிக்க யுத்தக்கப்பலொன்றும் யுத்தவிமானமொன்றும் தனது எல்லைக்குள் அத்துமீறியிருப்பதாக சீனா குற்றம் சுமத்தியுள்ளது.

---

# விண்வெளி வீரர்கள் பூமி திரும்பினர்

## மைக்கல் கொலின்ஸ் 'காமரா'வை பறிகொடுத்தார்

வாஷிங்டன், ஜூலை 22

விண்வெளியில் மூன்று நாள்வரை யாத்திரைசெய்து நாற்பத்திமூன்று தடவைகள் பூமியை வலம்வந்த 'ஜெமினி-10' வானவெளி வீரர்கள் இலங்கை நேரப்படி இன்று காலை 2-37க்கு மேற்கு அத்லாந்திக் கடலில் பாரசூட்டில் 'தொப்'பென்று விழுந்தனர்.

அமெரிக்க விண்வெளி வீரர்கள் மைக்கல் கொலின்ஸும், ஜோன் யங்கும் கடலில் வந்திறங்குவதற்கு முன்னதாக அவர்களைப் பாதுகாப்புடன் கப்பலுக்கு எடுப்பதற்குச் சில கப்பல்கள் தயாராகவிருந்தன. ஆனால் குறிப்பிட்ட கப்பல் இருந்த இடத்திலிருந்து ஐந்து மைல் தூரத்தில் விண்வெளி வீரர்கள் 'தொப்' பென்று விழுந்தனர். சில நிமிடங்களுக்குள் ஹெலிகாப்டரொன்று அவர்களுக்கு மேலாகப் பறந்து சென்று அவர்களைத் தூக்கிச்சென்று அங்கு தயாராக இருந்த கப்பலுக்குள் இறக்கியது.

இந்த நிகழ்ச்சி அமெரிக்கா எங்கும் டெலிவிஷனில் ஒலி பரபப்பட்டது.

### புதிய சாதனை

இந்த இரு விண்வெளி வீரர்களும் 43 கடவைகள் பூமியை வலம்வந்திருக்கின்றனர். மூன்று நாள்வரை விண்வெளி யாத்திரை செய்துள்ளனர். இவர்களின் விண்வெளிக் கப்பல் மணிக்கு 17,500 மைல் வேகத்தில் சென்றிருந்தது. இந்தப் பிரயாணத்தின்போது விண்வெளி வீரர் மைக்கல் கொலின்ஸ் புதிய சாதனை ஒன்றை நிலைநாட்டியிருப்பது வாசகர்கள் பலர் ஏற்கனவே அறிந்ததே. இவர் 'ஜெமினி-10' விண்வெளிக் கப்பலிலிருந்து வெளியேறி விண்வெளியில் நடந்துசென்று ஏற்கனவே பூமியை வலம்வந்துகொண்டிருந்த 'அஜினா-8' என்ற ராக்கெட்டை அணுகி அதனிலிருந்த தகடொன்றைக் கழற்றிப் புதிய சாதனையை ஏற்படுத்தியுள்ளார். அப்பொழுது இவரிடம் இருந்த காமிரா ஒன்று வானவெளியில் தவறிவிட்டதென்று இப்பொழுது செய்தி கிடைத்திருக்கிறது.

கடைசியாகக் கிடைத்த செய்தியின்படி 'ஜெமினி-10' விண்வெளி வீரர்கள் இருவரும் தேகாரோக்கியத்துடனிருப்பதாக வைத்திய அறிக்கை தெரிவிக்கிறது.

---

# 10 நாட்களில் 21 அமெரிக்க விமானங்கள் வீழ்த்தப்பட்டன

ஹாங்காங், ஜூலை 22

நேற்று முன்தினம் வடக்கு வியட்னாம் ஒன்பது அமெரிக்க விமானங்களைச் சுட்டு வீழ்த்தியதென்றும் அமெரிக்க விமானிகள் பலரைச் சிறைப்பிடித்ததென்றும்சீன செய்தி ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

நேற்று மூன்று அமெரிக்க விமானங்களை வடக்கு வியட்னாம் சுட்டுவீழ்த்தியது இம்மாதம் 19-ம் திகதிக்கும் 20-ம் திகதிக்குமிடையே மொத்தம் 21அமெரிக்க விமானங்களை வடக்கு வியட்னாம் சுட்டுவீழ்த்தியுள்ளதென்று இச்செய்தி ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

சைகோனிலுள்ள அமெரிக்க இராணுவ அதிகாரியொருவர் நேற்றுத் தெரிவிக்கையில் கடந்த 17 மாதங்களில் 299 அமெரிக்க விமானங்களை வடக்கு வியட்னாம் சுட்டுவீழ்த்தியுள்ளதென்று கூறினார்.

(பி டி ஸி)

---

## எல்லாம் மாட்டுக்காக!

மணிலா, ஜூலை22

தெற்கு பிலிப்பைன்சில் ஜோலோ என்னும் இடத்தில் மூன்று களவாடப்பட்ட பசுக்களையிட்டு இரண்டு முஸ்லிம் பகுதியினர்சண்டையிட்டதைத்தொடர்ந்து ஒன்பதுபேர் இறந்தனர். இருவர் காயமுற்றனர். ஏறத்தாழ 100 ஆயுதந்தாங்கிய நபர்கள் இக்கலகத்தில் பங்குபற்றினர்.

(பி.டி.ஸி)

---

## 84 பேர் விடுதலை

அக்ரா, ஜூலை 22

கானாவில் ஏற்பட்ட திடீர் புரட்சியின் போது கைது செய்யப்பட்டு பாதுகாப்பில் வைக்கப்பட்டவர்களில்முன்னாள் எம். பி.க்கள் 52 பேரும் வேறு 32 பேரும் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

---

## பத்திரிகைகளுக்கு தடை உத்தரவு

சைகோன், ஜூலை 22

செய்தித் தணிக்கையை மீறிய குற்றத்துக்காக இங்கு இரண்டு (வியட்னாமிய மொழி) தினசரிப் பத்திரிகைகளை தென்வியட்னாம் தகவல் அமைச்சு தடை செய்துள்ளது. (பி டி ஸி)

---

## நீக்ரோக்கள் கலவரம்

ஒஹியோ, ஜூலை 22

இங்குள்ள நீக்ரோப்பகுதியில் ஒரு காரைப் பொலிசார் சுட்டதன் விளைவாக தொடர்ந்த கலவரத்தில் நான்கு பேர் காயப்பட்டனர். இவர்களில் காவற்படையினர் ஒருவரும் இரு குழந்தைகளும் அடங்கினர். (பி டி ஸி)

---

## ஆறுதடவை பின்போடப்பட்ட திறப்புவிழா

நெடுந்தீவு, வெள்ளி

குறிகாட்டுவனில் பொது மராமத்து இலாகாவால் அமைக்கப்பட்டதுறைமுகம் இம்மாதம்30-ந் திகதி ஸ்தல ஸ்தாபன மந்திரி திரு. எம். திருச்செல்வத்தால் திறந்து வைக்கப்படுகிறது. இவ்வருடப் ஆறுதடவை பின்போடப்பட்டது இத்துறைமுகத் திறப்புவிழா.

---

# இந்தோனேஷிய புதியமந்திரிசபை

## சுகர்ணோ - சுஹார்ட்டோ கருத்து வேற்றுமை

ஜாகர்த்தா, ஜூலை 22

புதிய மந்திரிசபை அமைப்பதில் இந்தோனேஷிய அதிபர் டாக்டர் சுகர்ணோவுக்கும் ராணுவத் தலைவர் மேஜர் சுஹார்ட்டோவுக்குமிடையே இப்பொழுது கருத்துவேற்றுமைஏற்பட்டிருப்பதாக இங்கிருந்து வெளியாகும் ஏஜன்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தோனேஷியாவின் புதிய மந்திரி சபை பற்றிய விபரம் அடுத்த வாரம் அறிவிக்கப்படும் என்று ஜெனரல் சுஹார்ட்டோ நேற்று அறிவித்தார்.

ஜெனரல் சுஹார்ட்டோ வேராணுவத் தலைவராகவும் பிரதம மந்திரியாகவுமிருக்க வேண்டுமென்று தற்பொழுது ஆட்சி சபையிலிருக்கும் பலரும் கருதுவதாகத் தெரியவருகிறது இதுவே சுகர்ணோ — சுஹார்ட்டோ கருத்து வேற்றுமைக்கும் காரணமாகவிருக்கலாமென்றும் சொல்லப்படுகிறது.

சுஹார்ட்டோ பிரதம மந்திரியாக வரவேண்டுமென்பதற்கு இந்தோனேஷிய மாணவர்களும் பலத்த ஆதரவுதெரிவித்துள்ளனர்.

---

## உலக வங்கி பண உதவி

வாஷிங்டன், ஜூலை 22

தொழில் அபிவிருத்தி குறைந்த நாடுகளுக்கு மேலதிகமான பண உதவி அளிக்குமாறு இங்கு கூடிய தொழிற்துறையில் வளமடைந்த நாடுகளை உலக வங்கியின் தலைவர் திரு ஜோர்ஜ் வூட்ஸ் கேட்டுக்கொண்டார். 1965-ல் அளிக்கப்பட்ட 5,8150 லட்ச டொலரிலும் மேலதிகமாக மூன்று அல்லது நான்கு கோடி டொலர் உதவி அளிக்குமாறு அவர் வேண்டியுள்ளார். (பி. டி. ஐ.)

---

## பந்தோபஸ்துசபை கூடுகிறது

நியுயோர்க், ஜூலை 22

ஸிரியாவின் கோரிக்கையின் மீது, ஐக்கிய நாடுகள் பந்தோபஸ்துசபை திங்கட்கிழமை கூறவிருக்கிறது.

ஸிரியாமீது இஸ்ரேல் விமானங்கள் தாக்குதல்கள் நடத்திவருகின்றன என்று ஸிரியா குற்றம் சுமத்தியுள்ளது.

---

## சீன நிபுணரின் அஸ்தி பீகிங்குக்கு

ஹேக், ஜூலை 22

மர்மமான முறையில் இங்கு மரணமான 42 வயதுள்ள சீன என்ஜினியர் ஸு ஸு-சாயின் உடல் நேற்றிரவு தகனஞ்செய்யப்பட்டது.

சீன நிபுணரின் மரணம் குறித்துப் பிரேத பரிசோதனை நடத்துமாறு உத்தரவிட்ட டச்சுப் பொலிஸார் நேற்று இதுபற்றித் தெரிவிக்கையில் மோட்டார் விபத்துக் காரணமாக இவர் இறந்திருக்கலாம் என்று தெரிவித்தனர். இருந்தபோதிலும் பிரேத பரிசோதனையின முடிவுகள் இதுதங்களுக்குக் கிடைக்கவில்லையென்றும் அவர்கள் கூறினர்.

சீன தூதரகத்தின் உத்தரவைத் தொடர்ந்தே சீன நிபுணரின் சடலம் தகனம் செய்யப்பட்டது என்றும் அஸ்தி பீகிங்குக்கு எடுத்துச் செல்ல ஒழுங்குகள் செய்யப்படுகிறதென்றும் அதிகாரியொருவர் தெரிவித்தார். (பி டி ஸி)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## தமிழப் பட்டதாரிகள் நியமனம் பின்போடப்பட்டது

வெள்ளவத்தை, வெள்ளி

தமிழ்ப்பட்டதாரிகளுக்குரிய நியமனங்கள் அக்டோபர் மாதத்திலேயே மேற்கொள்ளப்படுமெனத் தெரியவருகிறது

ஏறக்குறையஎண்ணூற்றுக்கு மதிய ஈன பட்டதாரிகள் கலந்துகொண்ட நேர்முகப் பரீட்சை பற்றிய பெறுபேறுகள் கல்வி இலாகாவிடமிருந்து கல்வி அமைச்சிடம் அங்கீகாரத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

பாடசாலைகளில் இரண்டாந் தவணைக்குரிய விடுமுறைக் காலம் இடையில் வருவதாலேயே நியமனங்கள் அக்டோபர் மாதத்திற்குத் தள்ளி வைக்கப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

## பாரதி விழா கொண்டாடுவர்

வெள்ளவத்தை, வெள்ளி

நீர்கொழும்புத் தமிழ் எழுத்தாளர் மன்றத்தினர் செப்டம்பர் மாதம் முதன் முதலாகப் பாரதி விழாவைச் சிறப்பாகக் கொண்டாடத் தீர்மானித்துள்ளனர்.

சென்ற ஆண்டு கொண்டாடப்பட்ட பாரதி விழாவைத் தொடர்ந்து இறக்குமதி, ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்கள தமிழ் இலக்கிய மன்றத்தினர் இம்முறையும் விரிவான முறையில் விழாவைக்கொண்டாடவிருக்கின்றனர். இலங்கை வானொலி தமிழ்ப் பிரிவில் நிகழ்ச்சிகளைப் பதிவுசெய்து ஒலிபரப்பவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது.

## வயோதிப மாதுவின் தாலிக் கொடியை பயமுறுத்திப் பறித்தாராம்!

நெடுந்தீவு, வெள்ளி

வயோதிப மாது ஒருத்தியை வழிமறித்து, பயமுறுத்தித் தாலிக்கொடியை பறித்துக் கொண்டு போனதாக இளைஞர் ஒருவர் சந்தேகத்தின்மீது நெடுந்தீவு கிழக்கு கிராமசேவையாளரால் கைதுசெய்யப்பட்டுக் காரியாதிகாரி திரு. எம். சுப்பிரமணியத்திடம் ஒப்படைக்கப்பட்டார்.

நெடுந்தீவு கிழக்கைச் சேர்ந்த நாகலிங்கம்சோதிப்பிள்ளை (60 வயது) தமது வீட்டிலிருந்து இரவு எட்டு மணிக்கு தமது கணவருக்கு சாப்பாடு கொண்டுபோகும்போதே இது நடந்ததாகப் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<u>தனிப்பட்ட</u>

## சம்பள உயர்வு கிடைக்கும்

யாழ்ப்பாணம். வெள்ளி

சுகாதார இலாகாவில் உள்ள சில்லறை ஊழியர்யர்கள் சிங்களத் தேர்ச்சி பெறாத காரணமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள வருடாந்த சம்பள உயர்வு சம்பந்தமாக, தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் அறிவித்துள்ளதாகத் தெரியவருகிறது.

சுகாதார இலாகாவில் உள்ள சில்லறை ஊழியர்களுக்கு சிங்களத் தேர்ச்சி பெறாத காரணமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள வருடாந்த சம்பள உயர்ச்சி கொடுக்கப்படவேண்டும் என யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி ஜி; பொன்னம்பலம் பிரதமரையும், சுகாதார மந்திரியையும் கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்து மேற்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

## தேவநற்கருணைத் திருநாள்

யாழ்ப்பாணம், சனி

சுன்னாகம் புனித அந்தோனியார் தேவாலயத்தில் நாளை மாலை தேவநற்கருணைத் திருநாள் நடைபெறும். திவ்விய பூசை விழா ஆரம்பமாகியதை அடுத்து ஊர்வலம் இடம் பெறும்.

சுன்னாகம் சந்தை மைதானத்தில் அமைக்கப்பட்டிருக்கும் மேடைக்கு ஊர்வலம் வந்தடையும். பிதா பிரான்சிஸ் சேவியர் பிரசங்கம் நிகழ்த்துவார்.

## சுகாதார சேவையாளர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஞாயிறு

ஆஸ்பத்திரி 'வாட்' பணியாளர் ஒழிப்பால் ஏற்படவிருக்கும் நிலைபற்றி ஆராய்வதற்கு, சகல தொழிற் சங்கங்களையும் கொண்ட ஒரு மகாநாட்டை உடனடியாக கூட்டும்படி சுகாதார மந்திரியை, தேசிய அரசாங்க சுகாதார சேவையாளர் சங்கம் கோரியுள்ளது.

'வாட்' பணியாளர் ஒழிப்பால் ஏற்படவிருக்கும் கவலைக்கிடமான எதிர்காலத்தை ஆதாரமாகக் கொண்டு மந்திரியுடன் பேச்சுவார்த்தை நடத்த விரும்புவதாகவும் மந்திரிக்கு அனுப்பியுள்ள மகஜரில் தெரிவித்துள்ளது.

## வரவேற்புக்கூட்டம்

யாழ்ப்பாணம், சனி

இலங்கைத் தமிழரசுக் கட்சித்தலைவராக டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து நல்லூர் மாவட்டத் தமிழரசு கட்சிக்கிளைவருகிற ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு நல்லூர் சந்தை மைதானத்தில் மாபெரும் வரவேற்பளிக்கவிருக்கிறது.

கூட்டத்திற்கு மாவட்டக் கிளைத்தலைவர் திரு. நா. அருணாசலம் தலைமைதாங்குவார் திரு. சா. வே. செல்வநாயகம் உட்பட தமிழரசுக்கட்சி அங்கத்தவர்கள் பலர் இக் கூட்டத்தில் கலந்துகொள்வர்




## கொழும்பு

சனி 23 - 7 - 66

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீற்றர் & 61 மீற்றர்**

6-45 நாதாஞ்சலி, 6-50 சைவ நற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

**344 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்ப இசை.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர்மன்றம், 5-45 இசை மெட்டு.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வயலின், 7-15 செய்திச்சுருள், 7-30 குங்குமம் — மாதர் நிகழ்ச்சி, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 உரைச்சித்திரம், 10-00 நேயர்விருப்பம்.

# மாணவர் மலர்

இடநெருக்கடி காரணமாக ''மாணவர்மலர்'' பகுதி இன்று வெளியாகவில்லை,

## தைரியம் இழக்கும் இளைஞர்கள்

### மரணவிசாரணை அதிகாரி கவலை

காங்கேசன்துறை, வியா

''நெஞ்சுரமும் உறுதியும் கொண்ட இளைஞர்கள் தேசத்துக்கு ஒரு பெரும் செல்வமாகும். அப்படியான இளைஞர்கள் வாழ்க்கையின் துன்பங்களை சகிக்க முடியாமல் தைரியம் இழப்பது கவலைக்குரிய விஷயமாகும்' இவ்வாறு பி. டி. ஜி குணதாஸ என்பவரின் மரணம் குறித்து காங்கேசந்துறை திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. ஏ. குமரகுரு தற்கொலையென தீர்ப்பளிக்கையில் கூறினார்.

மரண விசாரணையின் போது காலஞ் சென்றவரின் எஜமானரான திரு பி. எஸ். ஜோஸப் காலஞ்சென்றவர் கடந்த 15 வருடங்களாக தம்மிடம் சாரதியாக இருந்து வருவதாகவும் அவரைத் தம் பிள்ளைபோல் பார்த்துவந்ததாகவும் கண்ணீர் சிந்திய படி கூறினார். சம்பவதினத்தன்று இரவில் அவர் காரை படுவிரைவாக ஓட்டிச் சென்று விபத்துக்குள்ளாகியதாகவும், இந்த விபத்து சம்பந்தமாக பெரிதும் கவலை கொண்டிருந்ததாகவும் அவர் கூறினார்.

எஸ். ரட்ணம் என்ற மாணவன் சாட்சியமளிக்கையில் காலஞ் சென்றவர் தாம் உயிரை மாய்த்துக் கொள்ளப் போவதாகக் கூறிக் கொண்டு ஒரு போத்தலிலிருந்து எதையோ குடித்ததைத் தாம் பார்த்ததாகக் கூறினார்.

பிரேதப் பரிசோதனை நடத்திய டாக்டர்,கிருமிநாசினி அருந்தியதால் மரணம் ஏற்பட்டது என்று குறிப்பிட்டார். சார்ஜன்ட் ஏக்கநாயக்க பொலிஸ் தரப்பில் சாட்சியங்களை சமர்ப்பித்தார்.

## 'சக்தியை விஞ்ஞானிகூட அளவிட முடியாது'

வெள்ளவத்தை,வெள்ளி

''சந்திர மண்டலத்திற்கு மனிதனை அனுப்பும் விஞ்ஞானியால்கூட இறைவனின்சக்தியைக் கட்டுப்படுத்த முடியாது. ஒவ்வொரு மதத்தவரும் தத்தம் நெறியில் தவறாது ஒழுகிடல் வேண்டும். இறைவனின் நாமத்தை அரகரமகாதேவா என்று உச்சரிக்கும்போது பெறும் இன்பத்தைச் சினிமாப் பாட்டுக்களால் பெற முடியாது'' என்று செக்கடித் தெரு கதிரேசன் கோயிலின் முன்பாக நடைபெற்ற பக்தி பாடல் நிகழ்ச்சியின் போது பித்துக்குளி முருகதாஸ் குறிப்பிட்டார்.

அவர் தமது பஜனையில் மேலும் குறிப்பிட்டதாவது: ''இறைவனின் சக்தியை விஞ்ஞானிகளாலும் அளவிடமுடியாது. ஒரே நிலத்தில் அருகருகே வளரும் மல்லிகை மரம் மல்லிகைப் பூவையும் முல்லைமரம்முல்லை மலரையுமே மலரச் செய்யும். இதனை விஞ்ஞானிகளால் மாற்றியமைக்க முடியாது.

சாதியால், நிறத்தால்இன்னும்பல துறைகளில் மனிதர்கள் வேறுபட்டிருந்தாலும் அவர்களின் உடலில் ஓடும் இரத்தத்தை இறைவனே சிவப்பு நிறமாகப் படைத்தான். இதை உணராது சமூகம் மோதிக் கொண்டிருக்கிறது''

பின்னர் முருகதாஸ் பொன்[illegible] கௌரவிக்கப்பட்டார்.

## இவர்களுக்கு மதிய உணவில்லை

புதுக்குடியிருப்பு, சனி

புதுக்குடியிருப்புப் பகுதியிலுள்ள பாடசாலைச் சிறுவர்களுக்குக் கடந்த இரண்டு மாதங்களாக இலவச மதிய உணவு வழங்கப்படவில்லை என்பது குறித்து இப்பகுதிப் பெற்றோர் பெரிதும் கவலை அடைந்துள்ளனர். மதிய போசனஒப்பந்தக்காரருக்கு இதற்குரிய கெயர்மா வழங்கப்படவில்லையெனவும் இதனால்தான் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

## ஆஸ்பத்திரியில்வைத்திய அதிகாரி இல்லை

சங்கானை, வெள்ளி

கொட்டைக்காடு அரசினர் ஆஸ்பத்திரியில் வைத்தியஅதிகாரி பதவி மூன்று மாதங்களாகியும் நிரப்பப்படாததால் இப்பகுதி மக்களுக்கு பெரிதும் கஷ்டநிலை ஏற்பட்டுள்ளது.

இங்கு வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றிய டாக்டர் எஸ். கந்தசுவாமி உயர் கல்வி கற்பதற்காக மூன்று மாதங்களுக்கு முன்னர் வெளிநாடு சென்றுவிட்டதைத் தொடர்ந்தே இப்பதவி காலியாகவுள்ளது.

இதுசம்பந்தமாக பொதுமக்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு புகார் செய்திருந்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையெனத் தெரிகிறது.

## 545 சட்ட விரோத குடியேற்றக்காரர்

காங்கேசன்துறை,வெள்ளி.

இரண்டு வருடங்களுக்கு முன் சட்டவிரோதக்குடியேற்றக்காரரைப்பிடிப்பதற்கென காங்கேசன்துறையில்நிறுவப்பட்ட நிலையம் இதுவரை 545சட்டவிரோத குடியேற்லக்காரரைப் பிடித்துள்ளது.

கள்ளக் குடியேற்றக்காரர் பற்றித் தகவல் கொடுப்பவர்களுக்கு இந்நிலையம் ரூ.50 வெகுமதி கொடுக்கிறது,

## வீதியின் நிலை

சங்கானை. வெள்ளி

சங்கானைச் சந்தையின் மேற்கு பக்கத்திலுள்ள சங்கானை சங்கரத்தை வீதி பொது மராமத்து இலாகாவின் மேற்பார்வையின்கீழ் உள்ளது. இவ்வீதி சுமார் ஒருஆண்டு காலமாகத்திருத்தப்படாதிருக்கின்றது.

1961-ம் ஆண்டு இவ்வீதி திருத்துவதற்கென்று பொது மராமத்து இலாகாவினால் பறிக்கப்பட்டகற்கள் இன்று வரையிலும் கவனிப்பாரற்றுக்கிடக்கின்றது. இவ்வீதியால் தினந்தோறும் சந்தைக்குச் செல்லும் வாகனப் போக்குவரத்திற்குச் சிரமமாக இருக்கின்றது.

இதனால் பொதுமக்கள் போக்குவரத்திற்கு மிகவும் கஷ்டப்படவேண்டி ஏற்பட்டுள்ளது.

## கணேசபுரம் பயிர்ச்செய்கைக் குழு

கிளிநொச்சி, வியா

கிளிநொச்சியைச் சேர்ந்த கணேசபுரத்துக்கு பயிர்ச்செய்கைக் குழுவொன்றைத் தெரிவுசெய்யும் கூட்டம் கணேசபுரம் கிராமமுன்னேற்றச் சங்க மண்டபத்தில் காணியதிகாரி திரு. வீ. கிருஷ்ணபிள்ளை தலைமையில் நடைபெற்றது.

பின்வருவோர் பயிர்ச்செய்கைக் குழுவின் உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்; திரு. கே. குலசேகரம், காரியதரிசி: திரு. இ. கந்தையா, தனாதிகாரி: திரு. ஞா. செல்லையா.

மற்றும் 9 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

## விண்ணப்பப் பத்திரங்கள்

யாழ்ப்பாணம், சனி

தமிழ்ப் பாடசாலைகளுக்கு மாணவ ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான 1966ம் வருடப் பரீட்சை விண்ணப்பத் தாள்கள் 2-ம் குறுக்குத்தெருவிலுள்ள தமிழரசுக்கட்சிக் காரியாலயத்தில் இலவசமாக விநியோகிக்கப்படுகிறது.

## ஆஸ்பத்திரியில் தட்டுப்பாடு!

உடுப்பிட்டி. வெள்ளி

பருத்தித்துறை மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியில் சமீபகாலமாக இரவு நேரத்தில் மின்சார விளக்குகள் திடீரென்று நின்றுவிடுகின்றன. குழாய்நீர்க்கஷ்டமும் இந்த ஆஸ்பத்திரியைவிட்டு நீங்கிய பாடில்லை. இவ்விரண்டும் நோயாளருக்கு மிக முக்கிய தேவைகள் என்கதைச் சுட்டிக்காட்டி நெல்லியடி இளைஞர் இயக்கம் சுகாதார அமைச்சுக்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

ஏற்பு வியாதிகளுக்குரிய தரமான ஊசிமருந்துகளுக்கும் இவ்ஆஸ்பத்திரியில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் நோயாளர்கள் மிகவும் கஷ்டத்துக்குள்ளாகின்றனர்.

## துணிபெறுவதில் கஷ்டம்

புதுக்குடியிருப்பு, வெள்ளி

தனிப்பட்ட வியாபாரிகள் தற்பொழுது புடவைகளை அங்கிருந்து வாங்கி பொதுமக்களுக்கு விற்பனை செய்வதென்று தெரியாது கஷ்டப்படவேண்டிய நிலைமை இங்கே ஏற்பட்டுள்ளது,

இதனால் பொதுமக்களுக்கும் துணிகளை பெறுவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

## இடமாற்றம்

ஊர்காவற்றுறை,வெள்ளி

புங்குடுதிவு கிராம சபையில் பல வருடங்களாக லிகிதராகக் கடமையாற்றிய திரு. அ. ந. தம்பிராசா கொக்குவில் கிராம சபைக்கு லிகிதராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

கொக்குவில் கிராம சபையில் லிகிதராகக் கடமையாற்றிய திரு. எஸ். சரவணமுத்து புங்குடுதிவு கிராம சபைக்கு லிகிதராக நியமனம்பெற்றுள்ளார்.

## ஜி. ஸி. ஈ. (உயர்தர) பரீட்சைக் கட்டணம்

யாழ்ப்பாணம், வெள்ளி

ஜி.ஸி. ஈ. (உயர்தர) பரீட்சைக்கான கட்டணங்கள் இப்போது குறைக்கப்பட்டுள்ளன. ஒரு பாடத்துக்கு 20 ரூபாவாக நான்கு பாடங்களுக்கு 80 ரூபாய் கட்டி வந்த மாணவர், இவ்வருடம் முதல் ஒரு பாடத்துக்கு 15 ரூபாவாக, நான்கு பாடங்களுக்கு ரூபா 60 கட்டலாம்.

## ஊர்காவற்றுறைக்கு ஐ. ஜி. பீ.

ஊர்காவற்றுறை, சனி.

ஊர்காவற்றுறையில் பொலீஸ்நிலயபொன்றை நிறுவுமுகமாக பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. ஜோன் அட்டிகல இன்று சனிக்கிழமை இங்கு வந்து சேருவாரெனத் தெரிகிறது. அவர் ஊர்காவற்றுறையைச் சுற்றிப் பார்வையிடுவார்.

## விடாமுயற்சியால் நிலம் வாங்கினர்

சங்கானை, வெள்ளி

அராலி மேற்கு கூட்டுறவுச் சங்கத்தினர் தமது விடாமுயற்சியால் இச்சமயம் சங்கத்துக்கென ஒரு நிலத்தை விலைக்கு வாங்கி கட்டட வேலையை ஆரம்பித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

## தேவை

கணக்குப் பதிவாளரும் பொது உதவியாளருமாக கடமை புரிய ஒருவர்.

(I) தகுதி

அ. வயது 25—45.

ஆ. அறிவு; குறைந்தது G. C. E. சாதாரண பரீட்சையில் ஆங்கிலம், தமிழ் எண் அல்லது வர்த்தக கணிதம் என்னும் பாடங்களில் சித்தி. (கூட்டுறவுப்பயிற்சி உடையோர்க்கு விசேஷ சலுகை)

(II) சம்பளம்: அனுபவத்திற்கும் தராதரத்துக்கும் ஏற்ப ரூபா 100/—150/-(படிகள் உட்பட) வருடாந்தப் படி உயர்வு ரூ. 10/-

(III) காசுப்பிணை ரூ. 500/-

(IV) விண்ணப்ப முடிவு திகதி 10-8-66.

தலைவர்,
அரியாலை ப.நோ. கூ.சங்கம்,
500, கண்டி வீதி,
686 யாழ்ப்பாணம்.



## நெல்லியடிப் பட்டினம்
## கேள்வி விளம்பரம்

1966-ம் ஆண்டு ஆவணி மாதம் 9-ந் திகதி பிற்பகல் 3-00 மணி வரைக்கும் மேற்படி பட்டின விசேஷ ஆணையாளரால் பாணுத்தறை ஒழுங்கை வேலைக்கு பதிவுசெய்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து கேள்விகள் அழைக்கப்படுகின்றன. கேள்விப்பத்திரம் ஒவ்வொன்றிற்கும் கேள்விப்பணம் ரூபா 25/-ம் பத்திரப்பணம் ரூபா 5/-ம் செலுத்தியதன் பேரில் 6-8-66 வரை விசேஷ ஆணையாளரால் வழங்கப்படும் உத்தியோகபூர்வமான பத்திரங்களில் கேள்விகள் அனுப்பப்படல் வேண்டும்.

ஏனைய விபரங்கள் நெல்லியடிப் பட்டின விசேஷ ஆணையாளர் அலுவலகத்தில் பணிபுரியும் நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

சி. சி. மாணிக்கவாசகர்.
விசேஷ ஆணையாளர்.

விசேஷ ஆணையாளர்
அலுவலகம்,
நெல்லியடிப் பட்டினம்,
கரவெட்டி, 21-7-1966.
685



**General Arts Qualifying Examination Classes**

Conducted at Chundikuli Girls' College, Jaffna. All subjects provided. Please apply early Mrs. S. Nadarajah C/o Miss M. Y. Muthiah, 12, Colombagam Road, Jaffna. 675


## புதுவருட நிர்வாகிகள்

சங்கானை, வெள்ளி

சங்கானை ஸ்ரீபார்வதி சனசமூக நிலையத்தின் வருடாந்தக் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட புதுவருடநிர்வாகிகள் வருமாறு:-

தலைவர் திரு. க. வ. அரசன், உபதலைவர் திரு. ப. கந்தையா, காரியதரிசி திரு: கா. கந்தசாமி, உபகாரியதரிசி திரு. நீ. நாகமுத்து, தனாதிகாரி திரு. பொ. கணேசன், உபதனாதிகாரி திரு. க. தெய்வேந்திரம்

## மாவிட்டபுரம் கந்தசுவாமிகோவில் உற்சவம் இன்று ஆரம்பம்

சங்கானை, சனி

மாவிட்டபுரம்கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவம் இன்று கொடியேற்ற உற்சவத்துடன் ஆரம்பமாகிறது.

## சன்றைஸுக்கு வெற்றி

யாழ்ப்பாணம், ஞாயிறு

பாஷையூர் அர்ச். அந்தோனியார் விளையாட்டுக் கழகத்தின் ஆதரவில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் 'ஏ' பிரிவுக்கான உள்ளூர் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில்பாடுமீன் கோஷ்டிக்கும் சன்றைஸ் கோஷ்டிக்கும் இடையில் நேற்று நடைபெற்ற போட்டியில் பாடுமீன்கோஷ்டி 2—1 கோல்களால் சன்றைஸ் கோஷ்டியை வெற்றிபெற்றது. மத்தியஸ்தராக ஜி. எம். ஆர். மகாராஜா கடமையாற்றினார்.

## படித்த வாலிபருக்கு காணி

குமுளமுனை, விழாமுன்

முத்தையன் கட்டுத் திட்டத்தில் படித்த வாலிபருக்குக் காணி வழங்கப்படவிருக்கிறது. இவர்களை அங்கே குடியேற்றுவதாயும் சகல வசதிகளையும் செய்து கொடுப்பதாயும், வவனியா எம். பி. கூறியுள்ளார். இதன் காணிக்கச்சேரி எதிர்வரும் 29-ந் திகதி முல்லைத்தீவில் நடைபெறவிருக்கிறது.

## ஆசிய அபிவிருத்தி வங்கி

டோக்கியோ, ஜூலை 22

செப்டம்பர் 13ல் ஆரம்பமாகும் உத்தேசிக்கப்பட்டுள்ள ஆசிய அபிவிருத்தி வங்கியை நிறுவுவது பற்றிய மூன்று நாள் மகாநாட்டில் கலந்து கொள்ள இந்தியா உட்பட 16 ஆசிய நாடுகள் இங்கு கூடுமெனத் தெரிகிறது இவ் வங்கியின் தலைமைக் காரியாலயம் மணிலாவில் அமைக்கப்படும்.

(பி. டி. ஐ)

தெதுறுஓயா கொலை வழக்கு

## 'கொலைக்குப் பிறகே கழுத்து வெட்டப்பட்டது'

### டாக்டர் சாட்சியம்

குளியாப்பிட்டியா, வெள்ளி

"மூச்சு அடைக்கப்பட்டோ, கழுத்துத் திருகப்பட்டோ தான் இந்தக் கொலை செய்யப்பட்டிருக்கிறது. இதன் பிறகே கழுத்து வெட்டப்பட்டிருக்கிறது. கொலை செய்யப்படுவதற்கு முன்னால் வெட்டப்படவில்லை என்பதை நேராக, அழுத்தமாக வெட்டப்பட்டிருக்கும் வெட்டிலிருந்து தெரிகிறது. கொலை செய்யப்படுவதற்கு முன்னால் வெட்டப்பட்டிருந்தால், இப்படி நேராக வெட்டு விழுந்திருக்கமாட்டாது".

தெதுறுஓயா கொலை வழக்கு நேற்று குளியாப்பிட்டியா மாஜிஸ்டிரேட் முன் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது கொழும்பு சட்டவைத்திய அதிகாரி டாக்டர் டபிள்யு டி. எல். பெர்னாண்டோ சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு சொன்னார்.

தெதுறுஓயா பாலத்துக்கருகே தலையில்லாத முண்டமாக இருந்த பெண்ணை டபிள்யு. எம். அந்தோனி பெரேரா ஜெஸ்ரர்கொலை செய்ததாக இந்த வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளார்.

அடுத்த மாதம் 3-ந் திகதிக்கு மேல்விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது.

## 'இவர்களுக்கும் பென்சன் வேண்டும்

யாழ்ப்பாணம், சனி

சகல அரசாங்க கைத்தொழில் கூட்டுஸ்தாபனங்களில் வேலைபார்க்கும் ஊழியர்களுக்கும் பென்சன்வழங்கவும், அரசாங்க ஊழியர்களைப்போன்று விதவை, அநாதை பென்ஷன் வழங்கவும் உடன்நடவடிக்கை எடுக்கவேண்டுமென ஓர் மகஜரை அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணி பரந்தன் கிளை, அடுத்தமாதம் நடைபெற இருக்கும் அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் மகாநாட்டின்போது பிரதம மந்திரியிடம் சமர்ப்பிக்க இருக்கின்றனர்.

## பரிசளிப்புவிழா

தெல்லிப்பழை, வெள்ளி

தெல்லிப்பழை பாலர் ஞானோதயசபையின் 20-வது ஆண்டு பரிசளிப்பு விழா வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கிறது.

## வெங்காயத்தட்டுப்பாடு நீங்கியது

யாழ்ப்பாணம், சனி.

கடந்த சிலவாரங்களாக வெங்காயத்துக்கு இருந்து வந்த தட்டுப்பாடு இப்பொழுது முடிவடைந்துவிட்டது. நாட்டின் முழுத்தேவையையும் பூர்த்திசெய்ய இப்பொழுது யாழ்ப்பாணம் தயராகவுள்ளது.

வெங்காய அறுவடை ப்பொழுது முழு மூச்சுடன் நடைபெறுவதாயும், தினசரி 30 ரயில் சாமான்பெட்டி நிறைய சின்னவெங்காயம் கொழும்புக்கும் இதர இடங்களுக்கும் அனுப்பப்படுவதாகவும் வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க அதிகாரி ஒருவர்தெரிவித்தார்.

## தேசீய சுவீப்

(1ம்பக்கத் தொடர்ச்சி)

தலா ரூபா 159-25 கொண்ட 100 பரிசுகள்:

| | |
|---|---|
| 10 R 0228 | 04 W 0979 |
| 02 O 0288 | 04 S 0459 |
| 12 A 0273 | 02 R 0880 |
| 04 U 0953 | 06 S 0618 |
| 13 X 0816 | 11 T 0081 |
| 11 V 0060 | 10 P 0562 |
| 10 Q 0165 | 11 D 0668 |
| 03 Q 0142 | 07 F 0272 |
| 03 S 0523 | 12 R 0246 |
| 12 Y 0069 | 08 M 0751 |
| 15 W 0156 | 06 R 0202 |
| 01 A 0322 | 09 X 0219 |
| 10 H 0712 | 13 Y 0540 |
| 09 P 0319 | 13 M 0774 |
| 05 P 0753 | 15 Z 0540 |
| 02 F 0218 | 14 E 0905 |
| 04 E 0592 | 08 Y 0984 |
| 04 H 0768 | 04 K 0386 |
| 03 L 0373 | 03 Y 0407 |
| 05 B 0940 | 11 R 0583 |
| 03 V 0747 | 12 N 0324 |
| 09 W 0787 | 06 T 0020 |
| 10 A 0787 | 08 S 0877 |
| 04 W 0083 | 06 R 0971 |
| 15 W 0666 | 07 U 0077 |
| 04 O 0715 | 05 G 0604 |
| 02 J 0990 | 02 W 0524 |
| 10 C 0386 | 10 S 0971 |
| 01 O 0791 | 03 H 0565 |
| 12 Y 0454 | 01 G 0914 |
| 07 D 0187 | 06 W 0127 |
| 11 Z 0749 | 07 Z 0855 |
| 11 B 0106 | 06 Q 0070 |
| 13 C 0366 | 03 A 0775 |
| 04 J 0570 | 08 G 0585 |
| 01 C 0542 | 11 B 0706 |
| 11 B 0119 | 02 C 0728 |
| 11 P 0652 | 13 L 0292 |
| 13 F 0910 | 06 D 0989 |
| 07 H 0318 | 06 J 0210 |
| 07 P 0014 | 03 W 0455 |
| 12 U 0877 | 05 H 0122 |
| 12 E 0944 | 02 H 0170 |
| 12 Q 0087 | 12 L 0396 |
| 01 C 0046 | 08 F 0577 |
| 01 W 0198 | 04 X 0623 |
| 02 P 0244 | 12 L 0561 |
| 07 D 0938 | 03 K 0252 |
| 03 O [illegible] | 01 X 0317 |
| 09 C [illegible] | [illegible] B 0357 |


# வரி விளம்பரம்

## தேவை

பெண் நெசவாளர்:

''எங்கள் கைத்தறிநெசவு தொழிற்சாலைக்கு பெண் நெசவாளர்களிதேவை. விபரங்களுக்கு ஆ. ச. சங்கரப்பிள்ளை &பிறதர், 166, ஆசுப்பத்திரிவீதி, யாழ்ப்பாணம் விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்''. 782

## வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு நீரந்தி முதலிய பல கொடிய வியாதிகளை குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்ற லோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சைபெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## தேவை

மனேஜர்;

ஐந்து வருட தொழில் முறைகளிலும் நிர்வாகத்திலும் அனுபவமுள்ள ஒரு மனேஜர் தேவை. தொழில் முறைகளைப் பெருப்பித்து தொழிற்சாலையை அபிவிருத்தி செய்யும் சக்தியும் திறமையும் இருத்தல் வேண்டும். கடைச்சல், உருக்கி வார்த்தல் இவைகளில் அனுபவம் இருக்கவேண்டும். சம்பளமும் இலாபத்தில் ஒரு பங்கும் கொடுக்கப்படும். பத்திரங்கள் கொண்டுவர வேண்டும்.

இம்மாதம் 29-ம் தேதி காலை 10மணியளவில் நேரில் விண்ணப்பிக்கவும். மனேஜர், நெல்லியடி இன்டஸ்றியல் வேக்ஸ், கரவெட்டி. 781


## பெப். புரட்சிசதிவழக்கு

கொழும்பு, வெள்ளி

பெப்ரவரி புரட்சிச் சதிவழக்குவிசாரணையின்போது பொதுமக்கள் அனுமதிக்கப்படும் முறை, முந்திய புரட்சிச்சதி முறையையே பின்பற்றியிருக்கும்.

பத்திரிகை நிருபர்களுக்கு விண்ணப்பத்தின்பேரில் அனுமதிச் சீட்டுகள் அளிக்கப்படும்.

குற்றம்சாட்டப்பட்டுள்ளவர்கள் ஒவ்வொருவருக்கும் மூன்று சீட்டுகள் வழங்கப்படும். கோர்ட் வாசலில் குறிக்கப்பட்ட அளவு அனுமதிச்சீட்டுகள் வழங்கப்படும்.

## பெரியபுராணப் படிப்பு

கைதடி, வியா,

கைதடி இந்து வாலிபர் சங்கத்தின்ஆதரவில் கைதடி மேற்கு இடுங்கித்தோட்ட கந்தசாமி கோவிலில் பிரதி வெள்ளிக்கிழமைகளில்மாலை 7மணிதொடக்கம் இரவு 9 மணிவரை திரு.சி. சரவணமுத்துவால் பெரியபுராணப்படிப்பு நடத்தப்படுகிறது.


**REGAL—JAFFNA**
**NOW SHOWING**
Kerwin Mathews
in
**Panic In Bangkog**
(Cinmeascope - Color)

**நியூ காலிங்கன்**
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
முத்துராமன் - ராஜஸ்ரீ
நடித்த
**அம்மா எங்கே?**

**ராஜா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
போயா தினங்களில் 4 காட்சிகள்
எஸ். எஸ். ஆர். - பத்மினி
நடித்த
**காட்டு ரோஜா**

**4-வது வெற்றி வாரம்!**
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) விஜிதா (ஹட்டன்)
பி. ப. 2, 6, 9-30 மணி

ஒரு பெண் பைத்தியமாக இருந்தபோது!
எதற்கோ சிரித்தாள்......எதற்கோ அழுதாள்.
ஆனல் மனநிலை தெளிந்த பிறகோ எதற்கோ துடித்தாள்.
மனநிலை தெளிந்த ஒரு பெண்ணின் சிறு கதைதான்



ஜெயலலிதா - ஸ்ரீகாந்த்
மற்றும் பலர் நடித்த
ஸ்ரீதரின்
**"வெண்ணிற ஆடை"**
(ஈஸ்ட்மன் கலர்)
இசை:—விஸ்வநாதன், ராமமூர்த்தி
கதை, வசனம், டைரக்ஷன்
ஸ்ரீதர்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 'பொய்ச் சாட்சியம் கூறும்படி பொலிசார் பயமுறுத்தினர்'

## தெஹிவளை வழக்கில் எதிரிகள் விடுதலை

கொழும்பு, வெள்ளி

எதிரிகளுக்கு மாருகப் பொலிஸார் சாட்சியம் புனைந்துள்ளதாகச் சாட்சிகள் கூறியதன்பேரில், வீடு உடைத்துக் களவெடுத்ததெனக் குற்றஞ்சாட்டப்பட்ட இரு இளைஞரைக் கொழும்பு தெற்கு நீதவான் விடுதலைசெய்தார்.

இம்மாதத்தில் இரண்டாவது தடவையாக இப்படியொரு சம்பவத்தில் பங்குபற்றும் தெஹிவளைப் பொலிஸார் சம்பந்தப்பட்ட இவ்வழக்கில் பொலிஸ்நிலையத் தகவல்புத்தகத்தில் பதியப்பட்ட வாக்குமூலங்களுக்கு முரணுகச் சாட்சிகள் சாட்சியம் கூறுவதால், தம்மால் வழக்கைத் தொடர்ந்து நடத்த முடியாதிருப்பதாகத் தெஹிவளை உதவிப் பொலிஸ் சுப்ரிண்டெண்டெட்ண் திரு. வீரசூரியா நீதவான் திரு. சிவா செல்லையாவிடம் தெரிவித்தார்.

வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபொழுது வழக்கை உதவிப் பொலிஸ்சுப்ரிண்டெண்டெண்ட் நடத்த வேண்டியதற்கான விசேஷ சந்தர்ப்பங்கள் என்னவென்று நீதவான் கேட்ட கேள்விக்கு உதவிப் பொலிஸ்சுப்ரிண்டெண்டெண்ட் பதிலெதுவும் அளிக்கவில்லை.

தெஹிவளையைச் சேர்ந்த கே. வில்பேர்ட் பெர்ஞண்டோ சாட்சியமளிக்கையில், தான் மார்ச் மாதம் முதலாந் தேதியன்று தெஹிவளை பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும்தான் சொல்ல விரும்பிய வாக்குமூலத்தைப் பொலிஸார் பதிவுசெய்யவில்லை எனவும் கூறினர். பொலிஸார் தாம் விரும்பியதைச் சாட்சி கூருவிடில் தன்னைத் தாக்கிவிடுவோமெனப் பயமுறுத்தியதாகவும் அவர் மேலும் கூறினர்.

வெள்ளவத்தையைச் சேர்ந்த பி. கே. ஜி. சிறிசேன சாட்சியமளிக்கையில் முதலாவது எதிரி கொடுத்த பொருட்கள் எங்கேயென்று தன்னைப் பொலிஸார் வினவியதாகவும், முதலாம் எதிரி தனக்கு ஒரு பொருளும் தரவில்லையென்று தான் பதிலளித்ததாகவும் தெரிவித்தார். ஆனாலும் பொலிஸார் தனது சைக்கிள் கடையிலிருந்த சில பொருட்களை எடுத்துக்கொண்டு, தன்னையும் இரண்டாவது எதிரியையும் ஜீப்பில் போட்டுக்கொண்டு பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றதாகவும் மேலும் தெரிவித்த அவர் பொலிஸ்நிலையத்தில் வைத்துத் திரு. றெஜிஅமரசேகரா தன்னை அடித்ததாகவும், சந்திரனுக்குத் தன்னை அனுப்புவதாகக் கூறியதாகவும் சொன்னர்.

நீதவான்: ''தெஹிவளைப் பொலிஸ்நிலையத்தில் ராக்கெட்டுகள் உண்டோ?''

இந்தக் கட்டத்தில் உதவி சுப்ரிண்டெண்டெட்ண்வழக்கைத் தொடரமுடியாதநிலை பற்றிக் கூறியதைத்தொடர்ந்து நீதவான் எதிரிகள் இருவருக்கும் விடுதலையளித்துத் தீர்ப்புக் கூறினர்.

## '1968-ல் சந்திரனில் இறங்குவோம்'

ஹவுஸ்டன், ஜுலை 22

''ஜெமினி-10'' விண்வெளிவீரர்கள் இருவரும் தங்களது வானவெளிப் பயணத்தை வெற்றிகரமாக முடித்துவிட்டுத் திரும்பியுள்ளனர். சந்திரனை அடையும் அமெரிக்க முயற்சிக்கு இது பெரும் வெற்றி என்று அமெரிக்க விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

1969-ம் ஆண்டு நடுப்பகுதியில் அமெரிக்காவின் முதலாவது விண்வெளிப் பிரயாணிகள் கோஷ்டி சந்திரனில் இறங்கலாம் என்று அமெரிக்க விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

''ஜெமினி-10'' விண்வெளிவீரர்களின் சாதனை அபாரமானது; எமது அடுத்த திட்டத்துக்கான வழியைக் கண்டுபிடித்துக் கொடுத்திருக்கின்றனர் என்றும் அவர்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையே சந்திரனுக்கு அமெரிக்கா அனுப்பிய ''சர்வேயர்'' தனது பணியை இன்று முடித்துக் கொண்டுவிட்டதாக இங்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

'சர்வேயர்' கடந்த மாதம் இரண்டாம் திகதி சந்திரனில் போய் இறங்கியது. இதுவரை பதினோராயிரத்துக்கதிகமான சந்திர புகைப்படங்களை இது பூமிக்கு அனுப்பிவைத்துள்ளது.

## இரங்கற் கூட்டம்

யாழ்ப்பாணம் ஸ்ரீ இராமகிருஷ்ண சபையின் ஆதரவில் அதன் இணைச் செயலாளர்களில் ஒருவரான டாக்டர் க. சி. சண்முகரெத்தினம் அவர்களின் அகால மரணத்தையிட்டு மக்களின் அனுதாபத்தைத் தெரிவிக்கும் பொருட்டு 23-7-66 சனிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்திலுள்ள விவேகாநந்த மண்டபத்தில் டாக்டர் வ. த. பசுபதி அவர்களின் தலைமையில் ஓர் இரங்கற்கூட்டம் நடைபெறும்.

க. சதாசிவம், கா. வைரமுத்து.

(இணைச் செயலாளர், ஸ்ரீ ராம கிருஷ்ண சபை யாழ்ப்பாணம்)

பேச்சாளர்கள்.

சிவநெறிக்காவலர்
திரு தி. முத்துசாமிப்பிள்ளை, Bar-at-Law
வண. சுவாமி ஏ. எஸ். சேவியர், O. M. I.
முதல்வர் செ. முத்துத்தம்பி,
திரு. எஸ். எச். பேரின்பநாயகம், B. A.
திரு. ரி. ஜே. ராஜரத்தினம், நீதவான்.
திரு. சிவ. உ. சோமசேகரம், M. A.
குவாஸி எம். எம். சுல்தான். J. P. U. M.
திரு. கே. பி. ஹரன், ஆசிரியர், 'ஈழநாடு'
டாக்டர் கே. சி. பரிபூரணனந்தா
ச. அம்பிகைபாகன், B. A.

## ஆயுத வெடி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சென்ற திங்கட்கிழமை கொச்சிக்கடை பொலிஸ் நிலையத்திலிருந்துஸ்லெடென் துப்பாக்கிகளும் 49 துப்பாக்கிச் சன்னங்களும் காணுமல் போனதாக அறிவிக்கப்பட்டது.

## திரு .றெக்வுட்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெக்டர் ஜெனரல் திரு. ஜி. ஏ. கே. றெக்வுட் ராஜனுமா செய்துவிட்டார்.

பொலிஸ் இலாகாவுக்கு ரேடியோ டெலிபோன் சப்ளை செய்யும் ஒரு ஸ்தாபனத்துடன் அவர் தொடர்கொண்டிருந்ததே இதற்குக் காரணம் எனக்கூறப்பட்டது.

முன்னுள் பிரதம நீதிபதி திரு. எச். எச். பஸநாயகா, முன்னுள் ஆனந்தா கல்லூரி அதிபர் திரு எஸ் ஏ. விஜயதிலக, திரு. நெவில் ஜேன்ஸ், திரு. டி. பி. எல்லபோல ஆகியோர் இக்கமிஷனின் இதர அங்கத்தினர்களாகும்.

## சட்டவிரோத...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குரு ஆஜரானர். பொலிஸ் தரப்பில் காங்கேசன்துறை பொலிஸ் தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. எஸ். வி. மூர்த்தி ஆஜரானர்.

இராமநாதபுரம் ஜில்லா தேவகோட்டையைச் சேர்ந்த பழனிசாமிஅழகு சாட்சியமளிக்கையில் குறியதாவது:—

சென்ற 7-ம் திகதி நானும் மற்றும் முப்பது பேரும் தலா நூறுரூபா விதம் கருப்பையா என்னும் ஏஜண்டுக்கு கொடுத்து அ இரவு தென்னிந்தியக் கரையிலிருந்து ஒரு படகுமூலம் இலங்கையை நோக்கி வந்தோம். அப்படி வந்த நாங்கள் 8-ம் திகதி காலை மயிலிட்டிக் கரையில் இறங்கினேம். நாங்கள் இறங்கியதும் 'பொலிசு' 'ஆமி' என்ற சத்தங்கள் கேட்டது உடனே எல்லோரும் ஓடினேம். நான் ஓடிப்போய் ஒரு வீட்டிற்குள் நுழைந்தேன். அது எதிரியின் வீடு. எதிரியிடம் நான் தென்னிந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக இலங்கைக்கு வந்தவனென்றும் என்னை பொலிசும் இராணுவமும் துரத்திக்கொண்டு வருகிறது என்றும் எனக்கு புகலிடம் அளிக்கும்படியும் கேட்டேன். அதற்கு எதிரி மறுத்துவிட்டார். நான் என்னிடம் மேலதிகமா இருந்த வேட்டியையும் சேட்டையும் அங்கு வைத்துவிட்டு அவர்களின் மலசல கூடத்தில் ஒழித்திருந்தேன். என்னுடன் கறுப்பையா முத்தையாவும் வந்து ஒழித்தார். பொலிஸார் எங்களை அங்கு வந்து கைது செய்தார்கள்.

கறுப்பையா முத்தையா, பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. ஏ. எச். எம். ஐவ்வார், பலாலி கிராமச்சேவகர் ஆகியோர் பொலிஸ் தரப்பிலும் எதிரி தரப்பில் எதிரியும் சாட்சியமளித்தார்கள். நீதிபதி எதிரியைக் குற்றவாளியாகக் கண்டார். இக் கட்டத்தில் இன்ஸ்பெக்டர் திரு. எஸ். வி. மூர்த்தி நீதிபதியிடம் இக்குற்றம் ஓர் தேசவிரோதக் குற்றமென்றும், எதிரி அரசாங்கத்திற்குரிய காணியில் அரசாங்கத்தால் கட்டிக்கொடுக்கப்பட்ட வீட்டிலிருந்துகொண்டே அரசாங்கத்திற்கு விரோதமான செயலில் ஈடுபட்டவரென்றும் இப்படியானவர்களுக்குகொடுக்கப்படும் தண்டனை மற்[illegible] இருக்க வேண்டும் [illegible] விண்ணப்பித்தார்.

# மாஸ்கோவில் காமராஜர்; அக்டோபரில் அமெரிக்கா செல்வார்

மாஸ்கோ, ஜுலை 22

அகில இந்திய காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜ் இன்று பிற்பகல் மாஸ்கோ வந்து சேர்ந்தார்.

சோவியத் பார்லிமென்டைச் சேர்ந்த இரு சபைகளின் தலைவர்களும், மற்றும் பல சோவியத் தலைவர்களும் அவரை விமான நிலையத்தில் வரவேற்றனர்.

மாஸ்கோ ரேடியோவும், சோவியத் பத்திரிகைகளும், திரு. காமராஜரின் விஜயம் பாரத - சோவியத் நட்புறவை மேலும்இணைக்க வழி செய்திருப்பதாகக் கூறின.

திரு காமராஜர் இன்று காலை ஏர் இந்தியவிமானத்தில் மாஸ்கோ பயணமான போது விமானநிலையத்தில் பெருந்திரளான மக்கள் அவரை வழியனுப்பி வைத்தனர். திரு. காமராஜருடன் தமிழ்நாட்டுதொழில் மந்திரி திரு. வெட்கட்ராமனும் மாஸ்கோ செல்கிறர்.

சோவியத யூனியனிலும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் சுமார் மூன்றுவாரகாலம்வரை திரு. காமராஜர் சுற்றுவிஜயம் செய்வார். இவரது விஜயம் குறித்து இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி வாழ்த்துச் செய்தி அனுப்பியுள்ளார்.

அமெரிக்க அரசாங்க அழைப்பின் பேரில் திரு. காமராஜர் வருகிற அக்டோபரில் அந்த நாட்டுக்கு விஜயம் செய்வார்.

## கொலைமுயற்சி வழக்கு

பருத்தித்துறை, வெள்ளி

பருத்தித்துறை கொறணிகவாளியில் துப்பாக்கியால் சுட்டுகொலை செய்ய முயற்சித்ததாக ஆழ்வான் சுப்பன், ஆழ்வான் செல்லன், ஆறுமுகம் துரைராசா ஆகியோர்மீது தொடரப்பட்டவழக்கு பருத்தித்துறை நீதிபதி றேபேர்ட் சில்வா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

டாக்டர் சுப்பிரமணியம் சாட்சியமளிக்கையில், பரம்சோதி துரைராசா என்பவருடைய உடலில் 30 காயங்கள் இருந்ததாகவும், அவரின் இடதுகண் பார்வையிழந்துள்ளதாகவும் இராமகிருஷ்ணன் தவராசா ஆகியவர்களின் இடதுகண்களும் பார்வையிழந்துள்ளதாகவும் கூறினர். 'எக்ஸ்றே' நிபுணர் திரு. ரங்கநாதன் ஜெயரத்தினம் சாட்சியமளித்தபின் மேல்விசாரணை அடுத்த மாதம் 7ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## ஸ்ரீமுருகதாஸ் பஜனை நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், திங்கள்

பித்துக்குளி ஸ்ரீமுருகதாஸ் சுவாமிகளின் சங்கீர்த்தன பஜனை இம்மாதம் 26-ம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 6-30 மணிக்கு யாழ். மாநகரசபை மண்டபத்தில் நடைபெறும், யாழ்ப்பாணம் திவ்ய ஜீவன சங்கத்தினர் இந்தப்பஜனையை ஏற்பாடு செய்துள்ளனர்.

## புகையிரதத்தில் அபின் கடத்தியவர் கைது!

கொழும்பு, வெள்ளி

யாழ்ப்பாணத்திலிருந்து கடந்த புதன் கிழமை பிற்பகல் 1-30 க்கு கொழும்பு வந்த ரயிலிலிருந்து 2 ருத்தல் அபினை பொலிசார் கைப்பற்றினர்கள்.

இந்த அபின் ஒரு பார்சலில் இருக்கக்காணப்பட்டது.

இது சம்பந்தமாக ஒருவர் கைது செய்யப்பட்டு முனிஸிபல் நீதவான் முன்பு ஆஜர் செய்யப்பட்டார்.

## தொழில் நுட்ப பல்கலைக்கழகம்

கொழும்பு, வெள்ளி

கட்டுபொத்தையில் ஆரம்பிக்கப்படவிருக்கும் தொழில் நுட்பக் கல்லூரி, தொழில் நுட்ப உத்தியோகஸ்தருக்கு பயிற்சி அளிக்கும் பல்கலைக்கழகமாக்கப் படவிருக்கிறது

இங்கு சிவில், மெக்கானிக்ஸ், எலெக்ரிக்கல் என்ஜினியரிங் பகுதிகளுக்கு இந்த வருடத்தில். தலா 20 மாணவரும், தந்தி தொலைபோசி பொறியியல் வகுப்புக்கு 10 மாணவருமாக 70. மாணவர்கள் அனுமதிக்கப்படுவார்கள். ஐந்து வருடப் பயிற்சியின் பின்னர் பல்கலைக்கழக என்ஜினியரிங் தராதரத்துக்குச் சமனை டிப்புளோமா தாரதரப் பத்திரம் இவர்களுக்கு வழங்கப்படும். இவர்கள் பயிற்சி பெறும் காலத்திலேயே அரசாங்க தொழில் நுட்ப சுபகுதிளில் சாதனை பயிற்சி பெறுவார்கள்.

இவ்வருடத்துக்கான பயிற்சி உயர்தர கல்வி மசோதா பார்லிமெண்டில் நிறைவேற்றப்பட்ட பின்னர் ஆரம்பமாகும்.

## டாக்டர் போலுக்கு ஹன்டேரியன் பரிசு

கொழும்பு வெள்ளி

பிரபல வைத்திய நிபுணரான டாக்டர் ஏ. ரி. எஸ். போலுக்கு வைத்திய றேயல் கல்லூரியின் ஹன்டேரியன் பேராசிரியர் பரிசு கிடைத்துள்ளது. மதிப்புவாய்ந்த இந்தப் பரிசைப் பெற்ற டாக்டர் போல் மிகவிரைவில் லண்டன் சென்று தனக்கு கிடைத்த பரிசையிட்டு வைத்தியத் துறையின் விசேஷ அம்சம் ஒன்றையிட்டு விரிவுரை நடத்துவார் இவர் இருதய சிகிச்சை நிபுணர் குழு ஒன்றுக்கு தலைமை தாங்குவதற்காக அமெரிக்கா செல்லவிருக்கிறர்.

வருடத்தில் ஒருவருக்கு மட்டுமெ ஹன்டேரியன் பேராசிரியர் பரிசு வழங்கப்படுகிறது. டாக்டர்ஏ.ரி.எஸ். போலின் சகோதரரான டாக்டர் மில்லோரி போல் முன்னர் மூன்று தடவைகள் அடுத்தடுத்து இந்தப் பரிசைப் பெற்றிருந்தார்

திரு. ஏ. ரி. எஸ். போல்யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பிரபல வைத்தியர் எஸ். ஸி. போலின் மகனுவர்.

## செயற்குழு தெரிவு

யாழ்ப்பாணம், சனி

அகில பிராமண குரு சமூக சேவா சங்க மகாநாட்டுச் செயற்குழு அங்கத்தவர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

சிவஸ்ரீ என். எஸ். பரமேஸ்வரக் குருக்கள், சிவஸ்ரீ வ. சபாரத்தினக் குருக்கள், சிவஸ்ரீ சோ. சிவசுப்பிரமணிய ஐயர், சிவஸ்ரீ க. சாம்பசிவக்குருக்கள், சிவஸ்ரீ சோ. இ. சந்திரக்குருக்கள்

கோண்டாவில், வெள்ளி

இணுவில் கோண்டாவில் காரைக்கால் சிவன்கோவில் வருடாந்த உற்சவம் இன்று கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகின்றது. ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதி தேர்த் திருவிழாவும், இரண்டாந்திகதி தீர்த்தஉற்சவமும், நாலாந்திகதி பூங்காவனத் திருவிழாவும்நடைபெறும்.

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதியி[illegible] இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஜுலை மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org